1975 நவம்பர் 11]

(iii) அங்கு எடைபோட்டுத் தரப்பட்ட பொருட்களின் எடைகளில் குறைவு இருந்த காரணத்தால் அப்பண்டகசாலையின் மீது சென்னையிலுள்ள எடைகள்-அளவைகள் துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும், இன்றியமையாப் பொருட்களைத் தட்டின்றி வழங்குதற்பொருட்டு அங்கு உணவுப்பொருள் வழங்கு துறையின் மாதிரிக் கடை ஒன்று உடனே திறக்கப்படவேண்டும் என்றும் அந்த முறையீட்டில் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

(உ) அந்த முறையீட்டினையொட்டி, எடுக்கப்பட்ட நடவடிக்கை.

இனம் (i).—புகார் முற்றிலும் பொதுப்படையாக உள்ளது. இருப்பினும், பண்டகசாலை ஊழியர்கள் வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் மதிப்பளித்து நடந்துகொள்ளுமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென அப் பண்டகசாலையின் தலைமை நிர்வாக அலுவலருக்குத் தஞ்சாவூரிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இணைப்பதிவாளர் கட்டளை பிறப்பித்தார்.

இனம் (ii).—இக்குற்றச்சாட்டு பற்றி உணவுப் பொருள் வழங்கு துறை அலுவலர்கள் விசாரணை செய்து, அக்கூட்டுறவு மொத்தப் பண்டகசாலையின் மீது தவறு இல்லை என்ற முடிவிற்கு வந்தனர்.

இனம் (iii).—இந்தப் பண்டகசாலையின் இரண்டு கிளைகளில் மண்ணெண்ணெய் அளந்து கொடுப்பதற்காகவுள்ள ஒரு லிட்டர் கூம்புவடிவ அளவைகளில் முத்திரைகள் புதுப்பிக்கப்படாதது தொடர்பாக, மாயூரம் நீதித்துறை முதல் வகுப்பு நீதிபதியின் நீதிமன்றத்தில் குற்ற வழக்குகள் இரண்டு தாக்கல் செய்யப்பட்டன. நிர்வாகப் பணியாளர்கள் குற்றவாளிகள் அல்லர் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது; ஆனால், விற்பனையாளர்கள் குற்ற வாளிகள் எனத் தீர்ப்பளித்து, அவர்களைக் கண்டித்து மன்னித்து விடுதலை செய்தது.

Kuruvikkarambai Co-operative Credit Society, Peravoorani taluk Thanjavur district.

* 112. *Q.*—THIRU K. RAJARAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(*a*) whether it is a fact that the activities and business transacted by the Kuruvikkarambai Co-operative Credit Society